முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.03.03.2026

O.S No. 110/2022

வா.சா.1- நீலநாராயணன்

1ம்பிரதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பிரதிவாதியின் வீட்டிற்கு வடக்கு பக்கம் வழக்கு பி பட்டிகை சொத்தின் ஒரு பகுதி கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி செல்கிறது என்றால் சரி. மேற்படி வழக்கு பி பட்டிகை சொத்திற்கு வடக்கு பக்கத்தில் சந்திரசேகர் அவருக்கு உரிமைப்பட்ட முழுஇடத்திலும் வீடு கட்டியுள்ளார் என்றால் சரி. சந்திரசேகர் வீட்டின் தெற்கு பக்க சுவரிலிருந்து 3 அடி 3 இஞ்ச் தெற்கில் பிரதியின் வீட்டின் சுவர் உள்ளது என்றால் சரி. வழக்கு பி பட்டிகை சொத்தின் வீதி3 அடி என்றால் சரி. 3 இஞ்ச் இடத்தை விட்டு பிரதி வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. அந்த 3 இஞ்ச் இடத்தில் பிரதிவீட்டின் குழாய்கள் செல்கிறது என்றால் சரியல்ல.

பிரதி வீட்டின் வடக்கு சுவரில் மின்மீட்டர் உள்ளது என்றால் சரி. பிரதி வீட்டில் இருந்து வெளியே வருவதற்கு ஒரே நிலைகதவு என்றால் சரி. பிரதி வீட்டின் வடமேற்கு மூலையில் வாசல் உள்ளதென்றால் சரியல்ல. வடக்கு சுவரில் மேற்கு அற்றத்தில் இருந்து 2 அடி தள்ளி வாசல் உள்ளது. அந்த வாசலின் முன்பு உள்ள பி பட்டிகை சொத்தில் உள்ள படி வழியாக இறங்கி பொது பாதைக்கு செல்கிறார் என்றால் சரி. வடக்குபக்கமுள்ள படி பிரதியின் வடக்குசுவரில் உள்ள மின்மீட்டர் பொருத்தப்பட்ட காலத்தில் இருந்தே உள்ளதென்றால் சரியல்ல. மின்மீட்டர் பொருத்திய தேதியில் இருந்து எத்தனை நாள் கழித்து படிகட்டுகள் ஏற்படுத்தினார்கள் என்றால் ஞாபகமில்லை. நான் வழக்கு எ பட்டிகை சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பாகவே வழக்கு பி பட்டிகை சொத்தில் உள்ள படிகட்டுகளை பிரதி பயன்படுத்தி வருகிறார் என்றாலும் அதனால் தான் எந்தகாலத்தில் படிகட்டப்பட்டது என்று என்னால் சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல.

1ம் பிரதியின் படிகட்டுகளால் எனக்கு எந்த பாதிப்பும் இல்லை என்பதால் நான் எ பட்டிகை சொத்தை கிரயம் வாங்கியவுடன் அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1992 ம் தேதியில் இருந்தே பிரதி வீட்டின் வடக்கு சுவரில் மின்மீட்டர் பொருத்தப்பட்டு நாளது தேதி வரை அதே இடத்தில் உள்ளதென்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக எனது பிராதிலோ நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. உண்மையில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2021ம் ஆண்டு பிரதி எந்த கட்டுமானமும் செய்யவில்லை அதனால் தான் நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதி அவரது வீட்டின் முதல்தளத்தில் புதிதாக கட்டுமானம் கட்டியதாகவும் அதற்கு நாகர்கோவில் மாநகராட்சியில் புகார் கொடுத்ததாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரி.

நாகர்கோவில் மாநகராட்சியில் கொடுத்த புகாரில் நான் பிரதிவாதி புதிதாக சட்டத்திற்கு புறம்பாக அவரது இடத்தில் முதல் தளத்தில் கட்டுமானம் ஏற்படுத்துவதாகவும் அதனை இடித்து அகற்ற வேண்டும் என நான் கேட்டிருந்தேன் என்றால் சரி. மாநகராட்சியில் இருந்து அந்த புகாருக்கு இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்தார்கள். 1ம் பிரதியின் கட்டுமானம் பழையது என்றும் எந்த புதிய கட்டுமானமும் இல்லை என்றும் என் புகார் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு பி பட்டிகை சொத்தில் நான் கட்டியுள்ள படிகட்டில் இருந்து மேற்கு திசைக்கு சாய்வாக 5 அடி நீளத்திற்கு சிமெண்ட் தளம் அமைத்துள்ளேன் என்றால் சரி. என்னுடைய வீட்டின் கதவை திறக்கும்போது பி பட்டிகை சொத்தின் பகுதியின் கதவு வரும் என்றால் சரி. கதவு வெளிபக்கமாக திறக்கும் விதமாக வைத்துள்ளேன். என்னுடைய கட்டுமானங்கள் சட்டத்திற்கு புறம்பானது என்று 1ம் பிரதி கோட்டார்

காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. கோட்டார் காவல்நிலையத்திற்கு நானும் என் மனைவியும் விசாரணைக்கு சென்றோமா என்றால் ஞாபகமில்லை. அந்த புகாருக்கு நானும் என் மனைவியும் விசாரணை முடிவில் உரிமையியல் வழக்கு என்று மனு முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

2017 ம் ஆண்டு நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் 127 வது பாகத்தில் பூத் லெவல் ஆபிசராக வேலை பார்த்தேன் என்றால் சரி. அந்த காலகட்டத்தில் 1ம் பிரதியின் குடும்பத்தினரின் வாக்குகள் அனைத்தையும் நீக்கியதாக 1ம் பிரதி என் மீது புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. தாசில்தார் என்னை விசாரித்தார் அவர் விசாரணையில் பிரதியின் குடும்பம் சுசீந்திரத்தில் வசித்ததாக தெரிவித்தேன். எனது பணியில் குறை கண்டதால் நான் வேலையே வேண்டாம் என்று எழுதிகொடுத்து விட்டு வந்தேன். வருவாய்துறை அலுவலர் பிரதி குடும்பத்தின் வாக்குகளை சேர்த்தார் என்றால் எனக்கு தெரியாது. பிரதியின் குடும்பம் எந்தகாலத்திலும் சுசீந்திரத்தில் வசித்தது இல்லை என்றாலும் பி பட்டிகை சொத்தின் தென்பக்கத்தில் வசித்து வந்தார்கள் என்றாலும் சரியல்ல.

நான் என் பிராதிலும் நிருபண வாக்குமூலத்திலும் replication லிலும் சொல்லிய விவரங்கள் அனைத்தும் தவறானவை என்றாலும் சரியல்ல. நான் பி பட்டிகை சொத்தில் ½ அடிக்கு ஓடை கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. மாதிரி வரைபடம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிகளின் எதிர்கோருரிமை அனுமதிக்கதக்கது என்றாலும் என்னுடைய பிராது செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது)